(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 133.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2011 நவெம்பர் 09, புதன்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1204/ '11

1.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2000 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரை ஒவ்வொரு வருடத்திலும் இலங்கைக்குள்ளே சட்ட விரோதமாக எடுத்து வந்த வேளையில் கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களின் (ஹெரொயின் போன்றவை) அளவு தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி சட்டவிரோத போதைப் பொருட்களை இந்நாட்டுக்கு வரைவழைத்த ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) சட்ட விரோத போதைப்பொருட்களை எடுத்துவரல் சம்பந்தமாக ஓர் ஆளிடமிருந்தோ அல்லது நிறுவனத்திடமிருந்தோ அறவிடப்பட்ட அபராதத் தொகை தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி போதைப்பொருட்கள் வரவழைக்கப்பட்ட நாடுகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1231/ '11

2.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1281/ '11

3.

கௌரவ புத்திக பதிரண,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருணாகல் மாவட்டத்தின் பமுனாகொட்டுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குரிய இலிகினிகிரிய தொடக்கம் ஈத்தனவத்த வரையிலான பாதையில் ஹேனேகெதர கால்வாய்க்குக் குறுக்காக நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட பாலத்தின் நிர்மாணப் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) பாலத்தின் நிர்மாணப் பணிகள் தாமதமடைவதனால் பிரதேச மக்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) பாலத்தின் நிர்மாணப் பணிகள் திடீரென நிறுத்தப்பட்டமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) இப்பாலத்தை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) பாலத்தின் நிர்மாணப் பணிகள் முடிவுறுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) நிறுத்தப்பட்டுள்ள மேலே குறிப்பிடப்பட்ட பாலத்தின் நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1610/11

4.

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பாணந்துறை நீதவானின் உத்தியோகபூர்வ இல்லம் அமைந்துள்ள பாணந்துறை கரையோரப் பூங்காவுக்கு அருகாமையில் காணப்பட்ட காணியின் பரப்பளவு யாதென்பதையும்;

(ii) குறித்த காணியின் உரிமையாளர்கள் யாவர் என்பதையும்;

(ii) மேற்படி உத்தியோகபூர்வ இல்லம் 2004-12-26ஆம் திகதி ஏற்படட சுனாமி அனர்த்தத்தால் சேதமடைந்ததா என்பதையும்;

(iii) சேதமடைந்த உத்தியோகபூர்வ இல்லத்தையும் சுற்று மதிலையும் திருத்தியமைக்கச் செலவிட்ட மொத்த பணத் தொகை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பாணந்துறை நீதவானின் உத்தியோகபூர்வ இல்லமும் அது அமைந்துள்ள காணியும் தனியார் நிறுவனமொன்றுக்கு உணவகமொன்றை நடத்திச் செல்லும் பொருட்டு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) பாணந்துறை நீதவானுக்கு தற்போது உத்தியோகபூர்வ இல்லமொன்று இல்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) மேற்படி குத்தகை வழங்கலை சிபாரிசு செய்தவர்கள் மற்றும் அதற்கான அங்கீகாரத்தை அளித்தவர்கள் யாவர் என்பதையும்;

(ii) அதனுடன் தொடர்புடைய குத்தகை உடன்படிக்கையை சபாபீடத்தில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) மேற்படி ஆதனத்தின் உரித்துடைமை கைமாற்றப்பட்டபோது முறைகேடு மற்றும் அல்லது ஊழல் நடைபெற்றுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அதற்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1622/'11

5.

கௌரவ அனுர திஸாநாயக்க,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை அரசாங்கம் மிஹின் லங்காவுக்கு வழங்கிய பணத் தொகை வருடாந்த ரீதியில் வெவ்வேறாக எவ்வளவு;

(ii) அக்காலப் பகுதியில் மிஹின் லங்கா நிறுவனம் பெற்ற முழு வருமானம் எவ்வளவு;

(iii) மேற்படி ஒவ்வொரு வருடத்திலும் மிஹின் லங்கா நிறுவனம் பெற்ற இலாபம் அல்லது நட்டம் வெவ்வேறாக எவ்வளவு;

(iv) அவ்வருடங்களில் நட்டமடைந்திருப்பின், அதில் தாக்கம் செலுத்திய காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1205/ '11

6.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பிற்குச் சொந்தமான இதுவரை இலங்கைக்கு கொண்டுவரப்பட்டிராத கப்பல்கள் தற்போது தரித்து வைக்கப்பட்டுள்ள அல்லது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள நாடுகள் யாவை என்பதையும்;

(ii) அக் கப்பல்களை இலங்கைக்கு வரவழைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில் அத்தினம் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1234/ '11

7.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1282/ '11

8.

கௌரவ புத்திக பதிரண,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் தெவிநுவர புராணவெல்ல மீன்பிடித் துறைமுகத்தின் இடவசதி போதுமானதாக இல்லாமையினாலும், கடற்றொழில் அமைச்சினால் வழங்கப்படுகின்ற வசதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதனாலும் கடற்றொழிலாளர்களும் பல்தினப் படகு உரிமையாளர்களும் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர் என்பதையும்;

(ii) மேற்படி மீன்பிடித் துறைமுகத்தின் ஏலவிற்பனை மண்டபத்திற்கு நாளொன்றுக்குப் சுமார் தொல்லாயிரம் பல்தினப் படகுகள் வருகை தந்தபோதிலும் அத்தகைய நூறு படகுகளுக்குக்கூட மீன்களை ஏலவிற்பனை செய்வதற்கு மேற்படி இடம் போதுமானதாக இல்லையென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த மீன்பிடித் துறைமுகத்தினையும் ஏலவிற்பனை மண்டபத்தினையும் விரிவுபடுத்தி கடற்றொழிலாளர்களுக்கு போதுமான வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக எடுக்கும் காலம் எவ்வளவென்பதையும்;

(iii) இதற்காக தற்போது நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அப் பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1611/'11

9\.
கௌரவ அஜித் பி.பெரேரா ,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2018 ஆம் ஆண்டின் பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியை அம்பாந்தோட்டையில் நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதா;

(ii) ஆமெனில், மேற்படி விளையாட்டு விழாவை நடத்துவதற்காக அரசாங்கம் மேற்கொள்ள எதிர்பார்க்கும் மதிப்பீட்டுச் செலவு எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

1235/ '11

10\.
கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

1283/ '11

11\.
கௌரவ புத்திக பதிரண,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் திஹகொட மற்றும் மாலிம்பட பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குரிய பகுதிகளில் பாரம்பரிய பால் பண்ணையாளர்கள் பெருமளவில் வசிக்கிறார்கள் என்பதையும்;

(ii) தற்போது உயர் தரத்திலான பசுக்கள் மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் இன்மையினால் அவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளார்கள் என்பதையும்;

(iii) அரச நிறுவனங்களினால் உயர் தரத்திலானவை என்று வழங்கப்படும் பசுக்கள் கூட சிறந்த தரத்தினை கொண்டிருக்கவில்லை என்ற குற்றச்சாட்டுகளை அந்த பாற்பண்ணையாளர்கள் முன்வைக்கின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாற்பண்ணையாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு உயர் தரத்திலான பசுக்களையும் தேவையான ஆலோசனைகளையும் வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1341/ '11

12.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட திவிநெகும வேலைத்திட்டத்தின் ஆரம்ப வைபவத்திற்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அதற்காக மேற்கொள்ளப்பட்ட பிரசார வேலைகளுக்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) திவிநெகும வேலைத்திட்டத்தை மேற்பார்வை செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் யாவர் என்பதையும்;

(ii) மேற்படி மேற்பார்வைப் பணிகளுக்காக இவர்களுக்கு கொடுப்பனவுத் தொகை அல்லது சம்பளம் வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், ஒரு நபருக்கென மாதாந்தம் செலுத்தப்படும் பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 7.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

செயற்பாடு குறைவாகவுள்ள தொழில்முயற்சிகளுக்கும் மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களுக்கும் புத்துயிரளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 2.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 3.

பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்தொகுதி கல்லூரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 7.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 8.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 9.

கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 10.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 11.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 12.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.06.11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 13.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 14.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை 2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 15.

மின்வலு, சக்தி அமைச்சர்,— அணுசக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை 2008,— 1969ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் 34ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.06.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 16.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 17.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட துமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011),— “2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

20.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

21.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரீசலனை.

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**